யில் முழுமையாக பாசனத்திற்குரிய ஒரு பெரிய ஆறு. மேட்டூர் டாமில் தண்ணீர் திறந்துவிட்டால் இந்த ஆற்றின் மூலம் நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்கள் பாசனம் பெறக்கூடிய நிலையில் உள்ளது. அதே நேரத்தில் வெள்ளக் காலத்தில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தில் உள்ள நீரை வடிக்கின்ற வடிகால் பாசனமாகவும் அதைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு மிகப்பெரிய அந்த ஆற்றில் நீண்ட நெடிய காலமாக புல்டோசர் விட்டு அடிக்காத காரணத்தால் நெய்வேலி காட்டாமணி என்ற செடி நிறைய முளைத்து அதன் இரு கரைகளும் உடைந்து பல நூற்றுக்கணக்கான ஏக்கர்கள் பாதிக்கப்படுகின்றன. பயிர்கள் சேதம் அடைகின்றன. ஆகவே அந்த ஆற்றில் உடனடியாக சீர் செய்கின்ற பணியைத் துவங்கி இரு பக்கமும் கரைகள் கட்டி, ரிவிட்மென்ட் கட்டக்கூடிய திட்டம் அரசிடம் உள்ளதா? இல்லை என்ற பதிலை நம்முடைய அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதை மீண்டும் பரிசீலிக்கக்கூடிய நிலை இருக்கிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுல்லான் ஆறு என்பது பாசனம் மற்றும் வடிகால் செய்து கொடுக்கும் ஆறு என்பதை இந்த அரசும் உணர்ந்திருக்கிறது. இதனுடைய நீளம் 30 கிலோ மீட்டர். இந்த ஆற்றின் சராசரி அகலம் 10 மீட்டர். சுல்லான் ஆற்றில் தூர் எடுக்கும் வேலையைச் செய்வதற்கு அதிகமாக நிதி தேவைப்படுகிறது. பொதுவாகவே காவிரிப் பாசனத்தைச் சீர் செய்யவேண்டும் என்பது நம்முடைய ஒப்பற்ற தலைவி புரட்சித் தலைவி அவர்களுடைய நோக்கம். அதற்கான திட்டங்கள் எல்லாம் தயாரிக்கப்பட்டு உலக வங்கி உதவிக்காக மத்திய அரசின் ஒப்புதலுக்காகக் காத்துக்கொண்டு இருக்கிறோம். ஆகவே தனிப்பட்ட முறையில் இந்த ஆற்றினை சீர் செய்வதற்கு அதிகமாக நிதி தேவைப்படுகிற காரணத்தால் இல்லை என்று நான் சொன்னேன். இருந்தாலும் இதில் உள்ள மணல் மற்றும் திட்டு மேடுகளை எல்லாம் அகற்றி பாசனப் பகுதிகளில் ஒழுங்காகப் பாசனம் நடைபெறுவதற்கும் மழைக் காலங்களில் உடைப்பு ஏற்படாமல் தடுக்கும் வண்ணமும் உரிய நடவடிக்கைகளைப் பொதுப்பணித்துறை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 72. திரு. சி. தாமோதரன், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

72—

தரைமட்டப்பாலம் அமைத்தல்.

*4222.—திரு. சி. தாமோதரன் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

1991 பிப்ரவரி 6]

(அ) பரிசமங்கலம் கிராமத்திலிருந்து கெடிலம் நதிக் கரையின் குறுக்கே தரைமட்டப்பாலம் (Cause way) அமைத்து கடலூர்— திருக்கோவிலூர் அணைக்கட்டு சாலையுடன் இணைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழ வாய்ப்பில்லை.

திரு. சி. தாமோதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசமங்கலம் கிராமத்திலிருந்து கெடிலம் நதியின் குறுக்காக ஒரு தரைமட்டப் பாலம் அமைத்து திருக்கோயிலூர் அணைக்கட்டு சாலையுடன் அதாவது பிரதான சாலையுடன் இணைப்பதன் மூலம் அந்தப் பகுதியிலே வசிக்கின்ற 20—க்கும் மேற்பட்ட குக்கிராமங்களிலுள்ள சுமார் 30,000—க்கும் மேற்பட்ட பொதுமக்கள் மாவட்ட தலைநகருக்கும், கடலூருக்கும், நெல்லிக்குப்பம் நகருக்கும் சென்று பலனடைய வாய்ப்பாக இருக்கும். இதனை அரசு பரிசீலனை செய்து இந்த ஆண்டிலாவது அல்லது 1993—94 வது ஆண்டிலாவது பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே குறிப்பிடப்படுகிற பாலம் கட்டப்பட வேண்டிய சாலை ஒரு ஊராட்சி ஒன்றியத்தினுடைய பகுதியில் இருக்கிற சாலையாகும். இதனுடைய நீளம் சுமார் 300 மீட்டர் ஆகும். இதற்கு ஆகிற செலவு ஏறத்தாழ 85 இலட்சம் ரூபாயாகும். ஆனால் இந்தப் பகுதி மக்கள் அங்கே இருக்கின்ற நகரங்களை அடைவதற்கு உரிய வகையில் இதற்கு அருகாமையில் உள்ள திருமணிக்குழி சாலையில் ஒரு பாலமும் மேலப்படுவிலே ஒரு பாலமும் இருக்கின்ற காரணத்தால் இந்தப் பாலம் அவசியம் இல்லை என்று அரசு கருதுகிறது. இருந்தாலும் உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று வருகிற காலங்களில் இந்தப் பாலத்தினுடைய முக்கியத்துவத்தினை உணர்ந்து அதற்கான நடவடிக்கைகளில் இந்த அரசு இறங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 73. திரு, சி. இராமசுவாமி. மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.